**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்**

**மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈடு கோரும் தீர்ப்பாயம்**

**முன்னிலை :- திரு. V. சுந்தரராஜ், M.L.,**

**தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர்.**

**2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் புதன்கிழமை**

**திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீ குரோதி வருடம்,**

**மாசி திங்கள் 28 ஆம் நாள்**

**மோட்டார் வாகன விபத்துக் கோருரிமைத் தீர்ப்பாய மனு எண்.29/2024**

CNR. No.TNTV01-003020– 2024

1) இந்துமதி

2) மைனர்.கிஷோர், வயது.16/2023

(அவருக்காக அவரது காப்பாளரும், 1ம் மனுதாரருமான இந்துமதி மூலமாக)

....... ***கோருரிமையாளர்கள்***

-எதிர்-

1) அழகிரிசாமி

2) கிளை மேலாளர்,

MAGMA HDI ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட்

சென்னை. ..... ***எதிர்மனுதாரர்கள்***

இந்த மனு மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அங்கு மோட்டார் வாகன விபத்துக் கோருரிமைத் தீர்ப்பாய மனு எண்.45/2024 எண்ணிடப்பட்டு, இந்த நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு, இந்த நீதிமன்றத்தில் மோட்டார் வாகன விபத்துக் கோருரிமைத் தீர்ப்பாய மனு எண்.29/2024 என எண்ணிடப்பட்டது. இம்மனு என் முன்பாக 12.03.2025ம்

தேதியன்று இறுதியான விசாரணைக்காக வந்தபோது கோருரிமையாளர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.N.விநாயகமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.S.வீரபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், இரு தரப்பு வாதுரையை கேட்டும், இம்மனு சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கலாகும்..........

## உத்தரவு

கடந்த 02.04.2023ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் திருவாரூர் தாலுக்கா, மாங்குடி மெயின்ரோட்டில் தியாகராஜன் என்பவர் வீட்டின் எதிரே நடந்த சாலை விபத்தில் 1ம் கோருரிமையாளரின் மகள் விபத்தில் ஏற்பட்ட கொடுங்காயங்களினால் இறந்ததற்காக கோருரிமையாளர்கள் கோரியுள்ள இழப்பீட்டு தொகையான ரூ.40,00,000/- த்தினை மனு தாக்கல் செய்த நாள் முதல் உரிய வட்டியுடன் எதிர்மனுதாரர்கள் செலுத்தும்படிக்கும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை கோரியும் கோருரிமையாளர் தரப்பில் பிரிவு 140 & 166 M.V. Act 1988 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1) கோருரிமையாளர்கள் மனுவின் சுருக்கம் :-

1ம் கோருரிமையாளரின் மகளும், 2ம் இளவர் கோருரிமையாளரின் தாயாருமான இவ்வழக்கு விபத்தில் இறந்த ராதா கடந்த 02.04.2023ம் தேதி

மதியம் 12 மணிக்கு அவரது தாயார் வீட்டிற்கு செல்வதற்காக மாங்குடி மெயின்ரோட்டில் தியாகராஜன் என்பவரின் வீட்டின் அருகே நடந்து வரும்போது மாவூரிலிருந்து திருவாரூர் நோக்கி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த TN-50-AJ-4233 என்ற பதிவெண் கொண்ட YAMAHA இருசக்கரவாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரன் அடிக்காமலும் ஓட்டிவந்து மேற்படி ராதா மீது மோதி தூக்கி எறியப்பட்டதில் இடதுபக்க நெற்றி, வலது பக்க கை, கால், விலா ஆகிய இடங்களில் பலத்த கொடுங்காயமும், உடலெங்கும் ரத்த காயமும் ஏற்பட்டதால் 108 ஆம்புலன்சு மூலம் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 02.04.2023 அன்று உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் 03.04.2023 ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதால் மேற்படி மருத்துவமனையில் இறந்த ராதாவின் உடல் பிரேத பரிசோதனைக்கு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. மேற்படி விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் அதிவேகமும், அஜாக்கிரதையும், கவனக்குறைவுமே முழு காரணம் என்பதால் திருவாரூர் தாலுக்கா காவல்நிலையத்தில் குற்ற எண்.157/2023 இ.த.ச.பிரிவுகள் 279, 337 மற்றும் 304(A)ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்தில் இறந்த ராதா விபத்திற்கு முன்பு நல்ல உடல் ஆரோக்கியத்தோடும், திடகாத்திரமாகவும், சுறுசுறுப்பாகவும் செயல்பட்டு பூந்தோட்டம் பயிரிட்டு பூ பறித்து வியாபாரம்

செய்தும், பூ கட்டி கொடுத்தும் தினசரி ரூ.1000/-க்கு குறையாமல் சம்பாதித்து அதன்மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.30,000/-த்திற்கு மேல் வருமானம் ஈட்டி வந்ததாகவும், விபத்தில் இறந்த ராதாவுக்கு 2ம் கோருரிமையாளர் ஒரே மகன் எனவும், ராதாவின் கணவரும் இரண்டு மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டநிலையில் பள்ளியில் படித்து வரும் மைனர் 2ம் கோருரிமையாளர் தனது பெற்றோரை இழந்து ராதாவின் தாயாரும், 1ம் கோருரிமையாளருமான இந்துமதியுடன் வசித்து வருவதாகவும், 1ம் கோருரிமையாளர் எவ்வித வருமானமுமின்றி பல இடங்களில் கடன் பெற்று 2ம் மைனர் மனுதாரரை காப்பாற்றி வருவதாகவும், 2ம் மைனர் கோருரிமையாளர் ஏற்கனவே தந்தையை இழந்துவிட்டநிலையில் நல்ல வழிகாட்டியாக இருந்து பொருளாதார உதவி செய்து பக்கபலமாக இருந்த தாயையும் இழந்து அவர் மூலம் கிடைத்து வந்த அன்பு, பாசம், அரவணைப்பு, வருமானம் ஆகியவற்றை இழந்தும், 1ம் கோருரிமையாளர் தனது மகளை இழந்து அவர் மூலம் கிடைத்து வந்த அன்பு, பாசத்தை இழந்துள்ளதாலும், மேற்படி விபத்தை ஏற்படுத்திய வாகனம் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது எனவும், மேற்படி வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு நிலுவையில் இருந்து வருவதாகவும், தற்போது விபத்தினால் தனது தாயார் மூலம் கிடைத்து வந்த வருமானத்தை இழந்து மிகுந்த கஷ்ட ஜீவனத்திற்கு ஆளாகியுள்ளதாகவும், எனவே, கோருரிமையாளர்களுக்கு ஏற்பட்ட அன்பு, பாசம், அரவணைப்பு,

பொருளாதார இழப்பு, பிற்கால பலன்கள் ஆகியவற்றிற்கு இழப்பீடாக ரூ.40,00,000/-த்தை இழப்பீடாக 1, 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ கொடுக்க கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) **2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்**

விபத்து நடந்த விதம் மறுக்கப்படுகிறது. விபத்தில் இறந்த நபரின் வயது, வருமானம் ஆகியவை மறுக்கப்படுகிறது. இவ்விபத்தில் இறந்துபோன நபர் சாலை விதிகளை அனுசரிக்காமல் திடீரென சாலையை கடக்க முற்பட்டபோது விபத்தினை தனக்கு தானே ஏற்படுத்திக்கொண்டுள்ளார். TN-50-AJ-4233 என்ற பதிவெண் கொண்ட இருசக்கரவாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், எனவே, 2 ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல.

3) **இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் -**

(i) TN-50-AJ-4233 என்ற பதிவெண் கொண்ட YAMAHA என்ற வாகனத்தை அதன் ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து நடந்து சென்ற 1ம் கோருரிமையாளரின் மகள் மீது மோதி அதன்மூலம் அவருக்கு இறப்பை ஏற்படுத்தியுள்ளாரா?

(ii) கோருரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை 2 ம் எதிர்மனுதாரரிடமிருந்து கிடைக்கத்தக்கதா?

(iii) கோருரிமையாளர்கள் பெறும் இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

**4)** இம்மனுவில் கோருரிமையாளர் தரப்பில், 1ம் கோருரிமையாளர் கோ.த.சா.1 ஆகவும், திரு.சுரேஷ் கோ.த.சா.2 ஆகவும் விசாரணை செய்யப்பட்டு கோ.த.சா.1ன் மூலமாக கோ.த.சா.ஆ.1 முதல் கோ.த.சா.ஆ.12 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.அனுருப் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு எ.ம..சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5)** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6) பிரச்சினை எண்**.1-

கோருரிமையாளர்கள் தரப்பு கற்றறிந்த வழக்குரைஞர் திரு.N.விநாயகமூர்த்தி தனது வாதுரையில், இவ்வழக்கு விபத்தில் இறந்த ராதா கடந்த 02.04.2023ம் தேதி மதியம் 12 மணிக்கு அவரது தாயார் வீட்டிற்கு செல்வதற்காக மாங்குடி மெயின்ரோட்டில் தியாகராஜன் என்பவரின் வீட்டின் அருகே நடந்து வரும்போது மாவூரிலிருந்து திருவாரூர் நோக்கி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த TN-50-AJ-4233 என்ற பதிவெண் கொண்ட YAMAHA இருசக்கரவாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரன் அடிக்காமலும் ஓட்டிவந்து மேற்படி ராதா மீது மோதி தூக்கி எறியப்பட்டதில் இடதுபக்க நெற்றி, வலது பக்க கை, கால், விலா ஆகிய இடங்களில் பலத்த

கொடுங்காயமும், உடலெங்கும் ரத்த காயமும் ஏற்பட்டதால் 108 ஆம்புலன்சு மூலம் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 02.04.2023 அன்று உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் 03.04.2023 ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதால் மேற்படி மருத்துவமனையில் இறந்த ராதாவின் உடல் பிரேத பரிசோதனைக்கு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. மேற்படி விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் அதிவேகமும், அஜாக்கிரதையும், கவனக்குறைவுமே முழு காரணம் என்பதால் திருவாரூர் தாலுக்கா காவல்நிலையத்தில் குற்ற எண்.157/2023 இ.த.ச.பிரிவுகள் 279, 337 மற்றும் 304(A)ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் வாதிட்டார்.

**7)** 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்குரைஞர் தனது வாதுரையில், விபத்து நடந்த விதம் மறுக்கப்படுகிறது. விபத்தில் இறந்த நபரின் வயது, வருமானம் ஆகியவை மறுக்கப்படுகிறது. இவ்விபத்தில் இறந்துபோன நபர் சாலை விதிகளை அனுசரிக்காமல் திடீரென சாலையை கடக்க முற்பட்டபோது விபத்தினை தனக்கு தானே ஏற்படுத்திக்கொண்டுள்ளார். TN-50-AJ-4233 என்ற பதிவெண் கொண்ட இருசக்கரவாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், எனவே, 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல எனவும் வாதிட்டார்.

8) இந்த தீர்ப்பாயம் சாட்சிகளையும், சான்றாவணங்களையும் ஆராயும்போது அதிலும் குறிப்பாக, கோ.த.சா.1 முதல் தகவல் அறிக்கை (நகல்), கோ.த.சா.1 சாட்சியத்தையும் ஆராயும்போது 1ம் எதிர்மனுதாரர் TN-50-AJ-4233 என்ற பதிவெண் கொண்ட இருசக்கரவாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிய வருகிறது. கோ.த.சா.1 சாட்சியம் மற்றும் கோ.த.சா.ஆ.1 ஆவணத்தை பொறுத்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே, மேற்படி விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டது என்று இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

9) **பிரச்சினை எண்.2** -

மேலே கண்ட முடிவின் படி TN-50-AJ-4233 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை ஓட்டி வந்த நபரான வாகனத்தின் உரிமையாளரான 1ம் எதிர்மனுதாரர் மேற்படி விபத்திற்கு பொறுப்பாவார். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருவதாக 1ம் கோருரிமையாளர் தனது மனுவிலும், சாட்சியத்திலும் தெரிவித்துள்ளார். கோ.த.சா.ஆ.4 ஆவணத்தின்படி 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு

நிலுவையில் உள்ளது என தெரியவருகிறது. மேலும், இருசக்கரவாகனம் ஓட்டிச்சென்ற 1ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லையென கோ.த.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது. எனவே, கோருரிமையாளருக்கு வழங்கவிருக்கும் நஷ்ட ஈடு தொகையை 2ம் எதிர்மனுதாரர் செலுத்திவிட்டு அதை 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து (Pay and Recovery) பெற்றுக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடப்படுகிறது.

**10) பிரச்சினை எண்.3-**

கோருரிமையாளர் இம்மனுவின் மூலம் எவ்வளவு தொகை இழப்பீடு பெறத் தகுதியுடையவர் என்று ஆராய வேண்டியுள்ளது. கோருரிமையாளர்கள் தங்களது மனுவில் மொத்தம் ரூ.40,00,000/- நஷ்ட ஈடு கேட்டுள்ளார்கள். கோ.த.சா.1 தனது முதல் விசாரணையில் விபத்தில் இறந்த ராதா விபத்திற்கு முன்பு நல்ல உடல் ஆரோக்கியத்தோடும், திடகாத்திரமாகவும், சுறுசுறுப்பாகவும் செயல்பட்டு பூந்தோட்டம் பயிரிட்டு பூ பறித்து வியாபாரம் செய்தும், பூ கட்டி கொடுத்தும் தினசரி ரூ.1000/-க்கு குறையாமல் சம்பாதித்து அதன்மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.30,000/-த்திற்கு மேல் வருமானம் ஈட்டி வந்ததாக கூறியுள்ளார். இருந்தபோதிலும், அதற்கான ஆவணங்கள் எதுவும் கோருரிமையாளர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, இறந்துபோன நபரின் மாத வருமானத்தை கணக்கிடுவதற்கு Syed Sadiq vs. United India Insurance

Company Limited 2014(1) TNMAC 459 என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி 2008ம் ஆண்டு காய்கறி வியாபாரிக்கு Notional Income ரூ.6,500/- ஆக எடுத்துக்கொள்ளப்பட்டு மாத Notional Income நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்த விபத்தானது 2023ஆம் ஆண்டு நடந்துள்ளதால் பணவீக்க குறியீடு அடிப்படையில் கோருரிமையாளருக்கு மாத இழப்பீடு கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

Notional income fixed by the Hon'ble Supreme court of India for vegetable vendor during the year 2007 – 2008) Rs.6,500 X 348 (cost of inflation index for the year 2023-2024)

------------------------------------------------- = **Rs.17,534/-**

129 (cost of inflation index for the year 2007 – 2008)

எனவே, இறந்துபோன நபரின் மாத வருமானம் ரூ.17, 534/- என நிர்ணயம் செய்யப்படுகிறது.

**11)** மேலும், இறந்துபோன நபரை சார்ந்து கோருரிமையாளர்கள் இரண்டு பேர்கள் உள்ளார்கள். மாண்புமிகு உச்ச நீதிமன்றம், Sarala Varma and Others Vs. Delhi Transport Corporation and another, 2009 ACJ 1298 என்ற முன்தீர்ப்பின்படி இறந்துபோன நபரை சார்ந்து இரண்டு நபர்கள் இருப்பதால் அவருடைய மொத்த மாத வருமானத்தில் ரூ.17,534/-ல் மூன்றில் ஒரு

பகுதியான ரூ.5844/- ஐ கழித்தால் மீதமுள்ள ரூ.11,690/- அவருடைய மாத வருமானம் என்று கணக்கிடப்படுகிறது. மேலும் இறந்துபோன நபரின் வயது 40 என கோ.த.சா.ஆ.7 ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது. Prenay Sethi வழக்கின்படி இறந்துபோன நபரின் வயது மற்றும் அவரது தொழில் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இறந்துபோன நபருக்கு எதிர்கால வருமான வாய்ப்பு கிடைக்கத்தக்கது.

**12)** விபத்தில் இறந்துபோன நபரின் மாத சம்பளம் ரூ.11,690/- + (25%) ரூ.14612/-ஐ 12 ஆல் பெருக்கினால் ரூ.1,75,344/- என்றும், விபத்தில் இறந்துபோன நபரின் வயது 40 என்று கோ.த.சா.ஆ.3 மற்றும் 7ன் படி கணக்கிடப்பட்டுள்ளது. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் 2009 ACJ 1298 Sarala Varma Vs. Delhi Transport Corporation and Others என்ற வழக்கில் காட்டியுள்ள வழி காட்டுதலின் அடிப்படையில் பெருக்கல் குறியீடு 15 என நிர்ணயம் செய்யப்பட்டு ரூ.1,40,280/- ஐ 15 ஆல் பெருக்கினால் ரூ.26,30,160/- வருமான இழப்பாக கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. 1ம் கோருரிமையாளர் தனது மகளை இழந்து அவர் மூலம் கிடைத்த அன்பு, பாசம், அரவணைப்பு ஆகியவற்றை இழந்துவிட்டதாகவும், 2ம் கோருரிமையாளர் தனது தாயாரை இழந்து அவர் மூலம் கிடைத்து வந்த அன்பு, பாசம், அரவணைப்பு, வருமானம் ஆகியவற்றை இழந்துள்ளதாகவும் கூறியுள்ளார்கள். எனவே, கோருரிமையாளர்கள் அன்பு, பாசம், அரவணைப்பு ஆகியவற்றை இழந்ததற்காக தலா ரூ.25,000/- (மொத்தம்

ரூ.50,000/-) கிடைக்கத்தக்கது என்றும், ஈமக்கிரியை செலவிற்காக (Loss of Funeral expenses) ரூ.15,000/- கிடைக்கத்தக்கது என்றும், ஆஸ்தி இழப்பிற்காக (Loss of Estate) ரூ.15,000/-மும் தீர்வு கண்டு இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13) மேற்படி கணக்குகளின் படி மொத்த இழப்பீடாக கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | வருமான இழப்பு | ரூ. | 26,30,160/- |
| 2. | கோருரிமையாளர்களுக்கு அன்பு, பாசம், அரவணைப்பு ஆகியவற்றை இழந்ததற்காக தலா ரூ.25,000/- வீதம் | ரூ. | 50,000/- |
| 3. | ஈமக்கிரியை செலவிற்காக | ரூ. | 15,000/- |
| 4. | ஆஸ்தி இழப்பிற்காக | ரூ. | 15,000/- |
| | **மொத்தம்** | **ரூ.** | **27,10,160/-** |

எனவே, 2ம் எதிர்மனுதாரர் கோருரிமையாளர்களுக்கு ஒட்டுமொத்த இழப்பீடாக ரூ.**27,10,160/-**வழங்க வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் பிரச்சினை எண்.3 க்கு தீர்வு காணப்படுகிறது.

14) இறுதியில், மனு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

1) கோருரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.**27,10,160/-**ஐ 2ம் எதிர்மனுதாரர் அதற்குரிய வட்டியுடன் சேர்த்து இழப்பீடு வழங்கவேண்டுமென்றும், கோப்பிற்கு எடுத்த நாளிலிருந்து தொகை செலுத்தும் தேதி வரை 7.5% வட்டியுடன் சேர்த்து ஒரு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கிக் கணக்கு எண்ணான ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா,

விளமல் கிளை, திருவாரூர் கணக்கு எண்.CJMTVR292024MHG, IFSC. SBIN0004266 – இ மாறுதல் மூலம் வைப்பீடு செய்து நீதிமன்ற Email ID. tvr.cjm-tn@indiancourts.nic.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தகவல் தெரிவிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

2) மேற்படி முழு தொகையை வட்டி, செலவுத்தொகையுடன் எம்.சி.ஓ.பி. 29/2024 தீர்ப்பாயத்தின் பெயரில் செலுத்திவிட்டு அதனை 2 ம் எதிர்மனுதாரர் 1 ம் எதிர்மனுதாரரிடம் (Pay and Recovery) வசூலித்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடப்படுகிறது.

3) மேற்படி முழு தொகையை வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் எம்.சி.ஓ.பி.29/2024 தீர்ப்பாயத்தின் பெயரில் செலுத்தியவுடன் 1 ம் கோருரிமையாளர் ரூ.5,00,000/-ஐ வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் உடனடியாக பெற்றுக்கொள்ளவும், 2 ம் கோரிமையாளர் இளவராக இருப்பதால் அவருடைய பங்கு இழப்பீட்டு தொகையான ரூ.22,10,160/-ல் 50% தொகையை வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் உடனடியாக பெற்றுக்கொள்ளவும் மீதமுள்ள 50% தொகையை 3 வருட காலத்திற்கு ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் 3 ஆண்டுகளுக்கு நிரந்தர வைப்பீட்டில் வைக்கவும், அந்த காலகட்டத்தில் 2 ம் கோருரிமையாளர் அதற்குரிய வட்டி மற்றும் செலவுத்தொகையை மட்டும் பெற்றுக்கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

5) கோருரிமையாளர்கள் செலுத்தவேண்டிய மீதிநீதிமன்றக் கட்டணமான ரூ.26,102/-ஐ ஒரு மாத காலத்திற்குள் செலுத்தவும் உத்தரவிடப்படுகிறது.

6) வழக்கறிஞர் கட்டணம் ரூ.34,102/-

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

V SUNDARARAJ

Digitally signed by V SUNDARARAJ
DN: cn=V SUNDARARAJ, ou=GOVERNMENT OF TAMLNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.03.12 10:32:19 +0530

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிபதி /
தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.

**கோருரிமையாளர்கள் தரப்பு சாட்சி**

கோ.த.சா.1 – திருமதி.இந்துமதி

கோ.த.சா.2 - திரு.சுரேஷ்

**கோருரிமையாளர்கள் தரப்பு சான்றாவணங்கள் -**

கோ.த.சா.ஆ.1 – 02.04.2023 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை - நகல்

கோ.த.சா.ஆ.2 - 04.04.2023 தேதியிட்டசட்டப்பிரிவு மாற்று அறிக்கை - நகல்

கோ.த.சா.ஆ.3 – 04.04.2023 தேதியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கை - நகல்

கோ.த.சா.ஆ.4 – 06.04.2022 தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை - நகல்

கோ.த.சா.ஆ.5 - 02.09.2021 தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரர் வாகன பதிவு சான்று - நகல்

கோ.த.சா.ஆ.6 – 30.088.2022 தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு பாலிசி - நகல்

கோ.த.சா.ஆ.7 – 06.04.2023 தேதியிட்ட ராதாவின் இறப்பு சான்றிதழ் - நகல்

கோ.த.சா.ஆ.8 – 01.06.2023 தேதியிட்ட ராதாவின் வாரிசு சான்றிதழ் - நகல்

கோ.த.சா.ஆ.9 – 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை - நகல்

கோ.த.சா.ஆ.10 - 2 ம் மனுதாரரின் ஆதார் அட்டை - நகல்

கோ.த.சா.ஆ.11 - 1ம் எதிர்மனுதாரரின் வங்கி பாஸ்புத்தகம் முதல் பக்க நகல்

கோ.த.சா.ஆ.12 - 2 ம் மனுதாரரின் வங்கி பாஸ்புத்தகம் - நகல்

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி -**

எ.த.சா.1 - திரு.அனுருப்

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் -**

எ.த.சா.ஆ.1 – 131.08.2021 தேதியிட்ட TN-50-AJ-4233 பதிவெண் கொண்ட இருசக்கரவாகனத்தின் காப்பீடு ஆவணம் - நகல்

எ.த.சா.ஆ.2 – 26.02.2025 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு - நகல்

V SUNDARARAJ

Digitally signed by V SUNDARARAJ
DN: cn=V SUNDARARAJ, ou=GOVERNMENT OF TAMLNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.03.12 10:32:29 +0530

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிபதி /

தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.